# மூலம் நக்ஷத்ரம் (ஆத்ம லிங்கம்)



**1. கணபதி வழிபாடு**

பரசிவம், சின்மயம், பூரணம்,

சிவபோகபாக்யம் பரமநிதியம்

**2. திருவருட்பாவில் சிவ மூலம் சக்தி**

பாவனாதீதம் குணாதீதம் உபசாந்தபதம்

மகாமெளன ரூபம்

**3. திருப்பாவைபாசுரம் – 11 மூலம் இயல்பு**

கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து

செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்

குற்றமொன் றில்லாத கோவலர்தம் பொற்கொடி யே

புற்றர வல்குல் புனமயிலே போதராய்

சுற்றத்துத் தோழிமா ரெல்லாரும் வந்துநின்

முற்றம் புகுந்த முகில் வண்ணன் பேர்பாட

சிற்றாதே பேசாதே செல்வப்பெண் டாட்டிநீ

எற்றுக் குறங்கும் பொருளேலோ ரெம்பாவாய்.

**Video Link : https://youtu.be/RothL7zpYKY**

**விளக்கம் :**

குற்றமொன்றில்லாத கோவலன் நீ, அதீதமான குணங்கள் கொண்ட சாந்த சொரூபிணி நீ, பிரிவினைகள் பல பல விளைவுகளை ஏற்படுத்தி களேபரம் இல்லாமல் வினைகள் பல சாதிக்கும். திறமைகள் போற்றப்பட்டு பாராட்டப்பட்டு அவைகளை கற்று கறவைகள் கணங்கள் பல கறந்து

செற்றார் திறல் அழியச் செய்ய சென்று சரி செய்யும். பார்ப்பதற்கு எளிமையாக இருந்தாலும், பகை என்று வந்தால் போர் குணத்தோடு செயல்பட்டு வெற்றி பெறும். மகாசக்தி வாய்ந்த விருட்சம் கம்பீரமாக அமைந்திருப்பதற்கான காரணம் ஆழமான மூலமான வேர்களே. எனவே, இந்த மூலம் பேசக்கூடாது, சிணுங்க கூடாது. பேசினாலோ, சிணுங்கினாலோ, மரத்திற்கு ஆட்டம் கண்டு விடும். எனவே அனைத்திற்கும் மூலமான ஆஞ்சநேயர் உபசாந்த பதம், மகா மௌனரூபம் என்று இருக்க வேண்டும்.

எல்லோரும் ஒன்றாக வந்து பாராட்டினாலும், தன் நிலை தடுமாறாது கர்வமடையாது கருத்தாக சாதித்து காட்டும் மூலம் அரசாளும், நல்லவை ஆளும், அல்லவை நிர்மூலமாகும். குற்றமில்லாத குணவான் மௌனரூபமாக இருக்கும்.

குற்றமொன்றில்லாத கோவலர் தம் பொற்கொடியே மூலமாகும். இந்த மூலத்தின் நடை, உடை, பாவனை, குணம், சாந்தம், மௌனம், அத்தனையும் கற்றுக் கொடுக்க தேவையில்லை. மூல நக்ஷத்ரத்திற்கு இருளும், ஒளியும், இனிய உறவுகளே.

அருளும், மருளும் புரிந்த பரவரமே, காயும், கனியும் உபசாந்த மௌன ரூபங்களே!!

இந்த அதீதமான வெளிப்பாடுகள் புற்றில் புகுந்த பாம்பாகவும், கானகத்தில் ஆடும் மயிலாகவும் காட்டப்பட்டுள்ளன. கற்றத்து தோழிமார்கள் எல்லோரும் முற்றத்தில் நின்று பாடல் பாடினாலும், பஞ்சாயத்து செய்தாலும் எதற்கும் அசையாமல் வாய் பேசாமல் மகாமௌனமாக இருப்பது மூலத்தின் வலிமையாகும்.

மூலத்தில் பிறந்த அனுமானின் மகா மௌன ரூபமும், அதீத பாவன செயலும் போற்றத்தகுந்தவையாகும். அதே நேரத்தில் மூலம் பெண்ணாக பிறந்தால் திட்டாதே, பேசாதே செல்வப் பொண்டாட்டி நீ என்ற கோட்பாட்டிற்கிணங்க வாழ்க்கை மேற்கொண்டு கட்டிடங்கள் தெரிந்தாலும், அஸ்திவாரம் தெரியாது. இதுவே மூலத்தின் பொருளாகும். மூலமே வருக! மூலமே அருள்க!

**4. வேதத்தில் மூலம் ஜோதிசக்தி**

ஓம் பூர் புவ ஸ்வஹ **(மெட்டு)**

பிரஜாதிபாயை வித்மஹே
மஹாப்ராஜையை தீமஹி
ஜீவ மஸ்து தீமஹி
தன்னோ மூலாப் ப்ரசோதயாத்

அமைதியின் உருவாய் ஆனவனே
அனுமன் போல் ஒரு தொண்டனும் நீ
நடை உடை பாவனை ஏற்றவன் நீ
நன்மையே நினைப்பாய் நமோ நமோ

நற்குணம் உனது சொத்தாகும்
நற்பெயர் பெற்றது வித்தாகும்
மூலப்பொருளாய் திகழ்பவன் நீ
முழுஜெயம் ஜெயமே நமோ நமோ

ஓம் சிவாய மே நம சிவாய மே
த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்

**5. மூலம் கவிதை**

எதிர் பாராத பாவனைகள் நின் தர்மமாகும்
உதிர் காணாத குணங்கள் நின் மூலமாகும்
உபய சாந்த பதங்கள் உன் இலக்கணமாம்
அபய காந்த மௌனங்கள் உன் உருவமாகும்

அஸ்திவாரங்கள் தெரிவதில்லை; உச்சி காண்பதுண்டு
அமைதியான நகர்வு காணவில்லை; வளர்ச்சி விரைவுதுறுதி
அதீதமான மௌனம் உனக்கில்லை; உலகோருக்கு உய்ய உண்டு
அதிரடி மந்திரம் அடிக்கடி இல்லை; அடுக்கு மாடிக்கு உண்டு

நடை உடை பாவனை ராமனின் தர்மம்
நடை பாவனம் நயமானது நவீன தர்மம்
உடை பாவனம் சுயமானது உலக தர்மம்
குடை குணம் எதிர்பாராதது மௌன தர்மம்

பிடிசாபம் துர்வாசரே; பிடி சாந்தம உன்வாசமே
பிடிவாதம் பெண்மூலமே; பிடிமௌனம் ஆண் மூலமே
பிடிகரணை நின் மூலமே; பிடி சூழல் உனக்கரிதே
பிடி சோர்வு வாழ்க்கைக்கே; பிடி படிப்படியானதே

தெற்கு முக ஆகமங்கள் மூலத்தின் சனாதனம்
கிழக்கு முக ஆசனங்கள் மௌனத்தின் சாசனம்
வடக்கு முக ஆவணங்கள் அடங்குமுக மூலதனம்
மேற்கு முக ஆமணங்கள் அடங்காத கோமணம்

பழம் புசிப்பர், வடம் இழுப்பர்
கீழும் காப்பர், மடம் வழிப்பர்
விழும் தூக்கம், இனம் வர்க்கம்
ஆழும் விதிகள், அழுமே கதிகள்

## 6. அபிராமி அந்தாதியில் மூலம் சக்தி

**சகல சௌபாக்கியங்களும் அடைய**

தனந்தரும்; கல்வி தரும்; ஒருநாளும் தளர்வறியா

மனந்தரும்; தெய்வ வடிவுந்தரும்; நெஞ்சில் வஞ்சமில்லா

இனந்தரும்; நல்லன எல்லாம் தரும்; அன்பர் என்பவர்க்கே

கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

**நுண் கலைகளில் சித்தி பெற**

கண்களிக்கும்படி கண்டுகொண்டேன் கடம்பாடவியில்

பண்களிக்கும் குரல் வீணையும் கையும் பயோதரமும்

மண்களிக்கும் பச்சை வண்ணமும் ஆகி மதங்கர் குலப்

பெண்களில் தோன்றிய எம்பெருமாட்டிதன் பேரழகே.

**மனக்குறைகள் தீர**

அழகுக்கு ஒருவரும் ஒவ்வாதவல்லி; அருமறைகள்

பழகிச் சிவந்த பதாம் புயத்தாள்; பனி மாமதியின்

குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க

இழவுற்று நின்றுநெஞ்சே இரங்கேல் உனக்கு என் குறையே!

**பிறவிப் பிணி தீர**

என்குறை தீரநின்று ஏத்துகின்றேன்; இனி யான் பிறக்கின்

நின்குறையே அன்றி யார் குறை காண்; இரு நீள்விசும்பின்

மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியவாய்?

தன்குறை தீர எங்கோன் சடைமேல்வைத்த தாமரையே.

**Video Link : https://youtu.be/iVb8ulEiZMg**

## 7. விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் மூலம் சக்தி ஓம்... ஓம்... ஓம்...

| | |
|---|---|
| ஓம் பூர்ணாய நம | – சகல சக்திகளின் பூரணமே போற்றி |
| ஓம் பூரயித்ரே நம | – பூரண அருள் வழங்குபவரே போற்றி |
| ஓம் புண்யாய நம | – நினைத்தாலே புண்ணியமே போற்றி |
| ஓம் புண்யகீர்த்தயே நம | – சாதிக்க தூண்டும் நற்சாதனையே போற்றி |
| ஓம் அநாமயாய நம | – சூழ்நிலையால் மாறாத புனிதமே போற்றி |
| ஓம் மநோஜவாய நம | – மனோ வேக விவேகனே போற்றி |
| ஓம் தீர்த்தகராய நம | – கொள்கை மாறாத இயக்கமே போற்றி |
| ஓம் வஸ$^{6}$ரேதஸே நம | – பிரம்மச்சரிய தங்கமேனியனே போற்றி |
| ஓம் வஸ$^{6}$ப்ரதாய நம | – சகல செல்வங்களை வரமாக அளிக்கும் வரப்பிரசாதமே போற்றி |
| ஓம் வஸ$^{6}$ப்ரதாய நம | – மோட்சத்தை அளிக்கும் உலகியலே போற்றி |
| ஓம் வாஸ$^{6}$தேவாய நம | – வசுதேவ குமாரனே போற்றி |
| ஓம் வஸவே நம | – அஷ்டதிக் வசுக்களும் உடையவனே போற்றி |
| ஓம் வஸ$^{6}$மநஸே நம | – மூலப்பொருளாய் திகழ்பவனே போற்றி |
| ஓம் ஹவிஷே நம | – அஸ்திவாரமாய் இருப்பவனே போற்றி |
| ஓம் ஸத்கதயே நம | – நுண்ணறிவு பெட்டகமாய் அருள்பவனே போற்றி |
| ஓம் ஸத்க்ருதயே நம | – உலக வரங்கள் உடனுடன் அருள்பவனே போற்றி |
| ஓம் ஸத்தாயை நம | – வெற்றி வேண்டின் வெற்றிலை மாலை கேட்பவனே போற்றி |
| ஓம் ஸத்பூதயே நம | – மூச்சுக்காற்றிலிருந்து முன்னின்று காப்பவனே போற்றி |
| ஓம் ஸத்பராயணாய நம | – சத்தியத்திற்கு கட்டுப்பட்டு உதவும் தொண்டனே போற்றி |
| ஓம் ஸ$^{6}$ரஸேநாய நம | – அனுமனைப்போல் ராமனுக்கு மட்டுமே கட்டுப்பட்டவனே போற்றி |

| | |
|---|---|
| ஓம் யதுஸ்ரேஷ்டாய நம | – யதுக்களின் சிறப்பே போற்றி |
| ஓம் ஸந்நிவாஸாய நம | – புனிதர்களின் கூடாரமே போற்றி |
| ஓம் ஸ⁶யாமுநாய நம | – யதுகுலத்தின் சகவாசமே போற்றி |
| ஓம் பூதாவாஸாய நம | – இராம சமூகம் வாழும் இதயமே போற்றி |
| ஓம் வாஸ⁶தேவாய நம | – மாயைகளை வென்றவனே போற்றி |
| ஓம் ஸர்வாஸ⁶நிலயாய நம | – ஜீவ வாழ்வை சொர்கமாக்கும் நட்பே போற்றி |
| ஓம் அநலாய நம | – அளவில்லாத வற்றாத செல்வமே போற்றி |
| ஓம் தர்ப்பக்நே நம | – அதர்மத்தை அடிஉதையால் முடிப்பவனே போற்றி |
| ஓம் தர்ப்பதாய நம | – தர்மவான்களை கௌரவிக்கும் சடாரியே போற்றி |
| ஓம் த்ருப்தாய நம | – திருப்தியுடன் திருப்தி தரும் திருப்பதியே போற்றி |
| ஓம் துர்த்தராய நம | – தியானத்திற்கு உட்படாதவனே போற்றி |
| ஓம் அபராஜிதாய நம | – சுறுசுறுப்பு செயலே, சுட்டிப் பயலே போற்றி |

## 8.லலிதா ஸஹஸ்ரநாமத்தில் மூலம் சக்தி

ஸஹஸ்ரதளபத்மஸ்தா ஸர்வவர்ணோபசோபிதா
ஸர்வாயுததராசுக்ல ஸம்ஸ்திதா ஸர்வதோமுகீ

ஸர்வௌதன ப்ரீதசித்தாயாகின்யம்பா ஸ்வரூபிணீ
ஸ்வாஹாஸ்வதாமதிர்மேதாச்ருதி ஸ்ம்ருதி ரனுத்தமா

புண்யகீர்த்தி புண்யலப்பா புண்யச்ரவண் கீர்த்தனா
பலோமஜார்ச்சிதாபந்தமோசனீ பர்ப்பராலகா

விமர்ச ரூபிணீ வித்யா வியதாதி ஜகத்ப்ரஸ⁶
ஸர்வவ்யாதி ப்ரசமனீ ஸர்வம்ருத்யு நிவாரிணீ

அக்ரகண்யா சிந்த்யரூபாககல்மஷ நாசினீ
காத்யாயனீ காலஹந்த்ரீ கமலாக்ஷ நிஷேவிதா

தாம்பூலபூரித முகீ தாடிமீகுஸ⁶மப்ரபா
ம்ருபாக்ஷமோகினீ முக்யாம்ருடானீ மித்ர ரூபிணீ

**Video Link : https://youtu.be/DtSBLpQStT4**

## 9. கந்தகுரு கவசகத்தில் மூலம் சக்தி

ஏழையைக் காத்திடப்பா ஏத்துகிறேன் உன்நாமம்

உன்னையன்றி வேறொன்றை ஒருபோதும் நம்புகிலேன்

கண்கண்ட தெய்வமே கலியுக வரதனே

கந்தனென்ற பேர்சொன்னால் கடிதாக நோய்தீரும்

புவனேச்வரி மைந்தா போற்றினேன் திருவடியை

திருவடியை நம்பினேன் திருவடி சாக்ஷியாக

புவனமாதா மைந்தனே புண்ணிய மூர்த்தியே கேள்

நின்நாமம் ஏத்துவதே நான்செய்யும் தவமாகும்

நாத்தழும் பேறவே ஏத்திடுவேன் நின்நாமம்

முருகா முருகா வென்றேமூச் செல்லாம் விட்டிடுவேன்

உள்ளும் புறமும் ஒருமுருகனையே காண்பேன்

அங்கிங் கெனாதபடி எங்குமே முருகனப்பா

முருகன் இலாவிட்டால் முவ்வுலக மேதப்பா

அப்பப்பா முருகாநின் அருளே உலகமப்பா

அருளெலாம் முருகன் அன்பெலாம் முருகன்

ஸ்தாவர ஜங்கமமாய் ஸ்கந்தனாய் அருவுருவாய்

முருகனாய் முதல்வனாய் ஆனவன் ஸ்கந்தகுரு

ஸ்கந்தாச்ரம மிருக்கும் ஸ்கந்தகுரு அடிபற்றிச்

சரணம் அடைந்தவர்கள் ஸாயுஜ்யம் பெற்றிடுவர்

சத்தியம் சொல்கின்றேன் சந்தேக மில்லையப்பா

வேதங்கள் போற்றிடும் வடிவேலன் முருகனை நீ

சந்தேஹ மில்லாமல் சத்தியமாய் நம்பிடுவாய்

சத்தியமான தெய்வம் ஸ்கந்த குருநாதன்

சத்தியம் காணவே நீ சத்தியமாய் நம்பிடப்பா

**Video Link : https://youtu.be/fO7MD2St1iU**

**10. கந்தர் அநுபூதி மூலம் சக்தி**

விதிகாணும் உடம்பை விடா வினையேன்

கதிகாண மலர்க் கழல் என்று அருள்வாய்?

மதி வாள்நுதல் வள்ளியை அல்லது பின்

துதியா விரதா, சுர பூபதியே.(35)

நாதா, குமரா நம என்று அரனார்

ஓதாய் என ஓதியது எப்பொருள் தான்?

வேதா முதல் விண்ணவர் சூடும் மலர்ப்

பாதா குறமின் பத சேகரனே.(36)

**Video Link : https://youtu.be/x9sjGNdLHkw**

**11. ராகங்களில் மூலம் சக்தி**

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| தவலம் பரி | நாமநாராயணி | நாமநாராயணி | காம வர்த்தினி |

**12. மூலமந்திரம்**

ராமராமராமராமராமராமராம்

ராமராமராமராமராமராமராம்

**13. விருட்ச சக்தி பெற நட வேண்டிய மரம்**

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| மரா | பெரு | செண்பகம் | ஆச்சா |

**14. பரிகாரம்**

- காளி கோயிலுக்குச் சென்று எலுமிச்சை பழமாலை அணிவிக்கவும்
- சிறு படையல் போடவும்.

- குறைந்தபட்சம் 7 நபர்களுக்கு உதவிடுக.
- உங்கள் வழிபாட்டிற்கு ஏற்றபடி மந்திரங்களை பாராயணம் செய்யவும்.
- கோவிலுக்கு சென்று சுவாமியை தரிசிக்கவும்.
- 2x2 கண்ணாடி வைத்து உங்கள் முகத்தை பார்த்து தியானம் செய்யவும். (ஆடி தியானம்).
- நட்சத்திர கோயில் **அருள்மிகு சிங்கீஸ்வரர் திருக்கோயில்,** மப்பேடு - சென்னை.


**Aathma Trust (ஆத்ம லிங்கம்)**
Regd No: 96/19
33.கோசாலை, கிரிவலம்,
திருவண்ணாமலை - 600 501.

**Website :** www.aathmanakshtra.org
www.yaasha.in
**Email :** jhohumm@gmail.com
**Youtube :** aathmanakshatra